சிறுவர் சீர்திருத்தப் பாடங்கள்

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 OCTOBER

மலர்: 11 இதழ் : 1 அக்டோபர் 2017 விலை: ரூ. 5

## விபரீதத்தின் விளிம்பில் இளைய தலைமுறை







- உயிர் குடிக்கும் விளையாட்டுகள்
- பெருகும் இளம் குற்றவாளிகள்





- மது - போதை ஆதிக்கம்!
- பெற்றோரைக் கொல்லும் பிள்ளைகள்

# மீண்டும் மீண்டும் படைக்கும் அற்புதம்

ஒரு கார் அல்லது மொபைல் எவ்வளவு நுணுக்கங்களைக் அதன் பின்னால் கொண்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதை மனிதன் உருவாக்கும் நிலையை அடைவதற்கு மனித குலத்திற்கு பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தேவைப்பட்டது.



அதே கார் அல்லது மொபைல் அல்லது ஒரு ரோபோ தன்னைத்தானே இனப்பெருக்கம் செய்யும் ஒரு செயலை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அப்படியென்றால் எண்ணற்ற ஜீவிகளை அவற்றின் பக்குவத்தோடும் நுணுக்கங்களோடும் ஆரம்பம் முதலே படைத்தது மட்டுமல்ல பக்குவமான முறையில் அவற்றின் இனப்பெருக்கத்தையும் நிகழ்த்திக் கொண்டிருக்கும் இறைவனின் படைப்பாற்றலைப் பற்றி வியக்காமல் இருக்கமுடியுமா?

**● 29:19. அல்லாஹ் எவ்வாறு முதன் முறையாகப் படைக்கின்றான் என்பதையும், பிறகு எவ்வாறு அதை மீண்டும் படைக்கின்றான் என்பதையும் அவர்கள் என்றுமே கவனித்ததில்லையா? (மீண்டும் படைப்பது எனும்) இந்தப் பணி திண்ணமாக, அல்லாஹ்வுக்கு எளிதானதாகும்.**

**● 29:20. இவர்களிடம் கூறும்: பூமியில் சுற்றித் திரிந்து பாருங்கள் எவ்வாறு அவன் முதன் முறையாகப் படைத்துள்ளான் என்று! பின்னர், அல்லாஹ் இன்னொரு தடவையும் வாழ்வை நல்குவான். திண்ணமாக, அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றலுள்ளவன்.**

நம் உடலையே உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள்... முதன்முறைப் படைக்கும் போதே அவை தானியங்கியாகவே தங்கள் சந்ததி களையும் வழிவழியாக உருவாக்கிக் கொள்ளும் அற்புதத்தை என்னவென்று சொல்வது? மனிதர்களும் விலங்குகளும் தாவரங்களும் இன்னபிற ஜீவராசிகளும் இன்னும் நம் கண்களுக்குப் புலப் படுவதும் புலப்படாததுமான எண்ணிலாப் படைப்பினங்களும் தங்களைத் தாங்களே இனவிருத்தி செய்து கொள்ளுதல் என்பது தற்செயலான ஒன்றா?



ஒரு விதையையோ கடுகையோ எள்ளையோ எடுத்து நோட்டமிடுங்கள். அதற்குள் அடங்கியுள்ள மென்பொருளை - அதாவது அதில் அடங்கியுள்ள மூலப்பொருட்களின் இயல்புகளை செயல்பாடுகளை நடத்தையை அல்லது அதிலிருந்து முளைக்கப் போகும் தாவரத்தின் இலை, தண்டு, காம்பு போன்றவற்றின் இயல்புகள், நிறங்கள், வடிவங்கள், போன்ற விவரங்கள் அல்லது எவை எவை என்னென்ன விதத்தில் அளவையில் விகிதத்தில் இருக்கவேண்டும் என்னும் (தொடர்ச்சி இறுதி உள் அட்டையில்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 OCTOBER**

**மலர்: 11 இதழ் : 1 அக்டோபர் 2017 விலை: ரூ. 5**

**பொருளடக்கம்**

பெருகும் இளம் குற்றவாளிகள் -2

உயிர் குடிக்கும் விளையாட்டுகள -3

வேர்களை கொல்லும் விழுதுகள் -4

சிறுவர் சீர்திருத்தப் பாடங்கள் -5

ஈருலக நலனுக்கான ஐந்து கடமைகள்! -15

வழுக்கைத்தலையில் முடிமுளைத்தால்..? -18

கூட்டுக்குடும்பமா ? எச்சரிக்கை தேவை!! - 21

அண்டை வீட்டாரின் உரிமைகள் -23

வாசகர் எண்ணம் -24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775 / 09886001357**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# விபரீதத்தின் விளிம்பில் இளைய தலைமுறை

# பெருகும் இளம் குற்றவாளிகள்

● டில்லியில் 2012- -ல் இந்தியாவையே அதிர்ச்சிக்குள்ளாக வைத்த நிர்பயா கற்பழிப்பு சம்பவம், அதனைத் தொடர்ந்து மும்பை பெண் பத்திரிகையாளர் பாலியல் வன்புணர்வுக்குள்ளான சம்பவம் மட்டுமின்றி பல்வேறு வன்முறைகளிலும் 18வயதுக்குட்பட்ட இளஞ்சிறார்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை அறிவோம்.

● படிப்பில் சரியாகக் கவனம் செலுத்தவில்லை எனக் கண்டித்ததால், சென்னை மாணவன் ஒருவன் ஆசிரியையைக் கொடூரமாக கொலை செய்த சம்பவத்தை அறிவோம். சம்பவம் நடப்பதற்கு முந்தைய நாள் “அக்னிபாத்“ என்ற திரைப்படத்தில் வரும் கொலை செய்வது போன்ற காட்சியினை திரும்ப திரும்ப பார்த்துள்ளானாம்.

● சமீபத்தில், சென்னையில் நடந்த கொலையில்,பணம் மற்றும் மதுவுக்காக கூலிப்படையுடன் இணைந்து 17- வயது மாணவனும் கைதாகி, சிறுவர் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டான்.

● தன்னுடைய வயதான பெற்றோரின் கண்காணிப்பில் விட்டுச்சென்ற 4 வயது குழந்தைக்கு, தாய்மாமனே மது ஊற்றிக் கொடுத்து குடிக்க வைத்த கொடூரமும் அரங்கேறியுள்ளது.

● மாணவர்கள் மது அருந்திவிட்டு வகுப்புக்குள்ளேயே ஆசிரியையிடம் தகராறு செய்யும் மோசமான சம்பவங்களும் நிகழ்ந்து வருகின்றன.

● மத்திய அரசின் அறிவிப்புப்படி 16-18 வயதிற்குட்பட்ட சிறுவர்களால் செய்யப்படும் குற்றங்களின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு 22,740 ஆக இருந்தது. அது 2014 ஆண்டு கணக்கின்படி 33,526 எண்ணிக்கையை அடைந்துள்ளது. அதாவது ஐந்து ஆண்டுகளில் 47 மூ அதிகரித்துள்ளது. கொலை, கற்பழிப்பு, திருட்டு, கொள்ளை என பலவும் இதில் அடங்கும்.

### சீர்திருத்தப்பள்ளிகள் சீர்திருத்துமா?

இக்குற்றங்களில் பிடிபடும் சிறார்களின் நிலையும் கவலைக்குரியதே. சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்படும் இவர்களின் தண்டனைக் காலம் குறுகியது என்பதால் சீர்திருத்த காலத்தினை சீக்கிரமே முடித்துவிட்டு, வெளியே வந்துவிடலாம் என்பது இவர்களுக்கு மேலும் குற்றம் செய்ய ஊக்கம் தருகிறது. சமீபகாலமாகவே சீர்திருத்த இல்லங்களில் சிறார்கள் காவலாளிகளை தாக்கிவிட்டு தப்பி ஓடும் சம்பவங்களும் அதிகரித்து வருகிறது.

குடும்ப வறுமை, பிளவுபட்ட குடும்பம், மது, போதை பழக்கம், எளிதில் ஆபாசப்படங்கள் கிடைப்பது, சக நண்பர்களின் தூண்டுதல், சினிமா, ஊடகங்கள் போன்றவைதான் இளஞ்சிறார்கள் தவறான பாதையில் செல்வதற்கு காரணங்களாக அமைகின்றன என்று பலரும் பல காரணங்களைக் கூறலாம். ஆனால் வாழ்க்கைச் சூழலில் இவற்றின் மத்தியில்தான் மனிதன் வாழவேண்டியதிருக்கிறது. மனித மனங்களை பண்பட வைத்து உறுதிபடுத்துவது ஒன்றே இதற்கான உண்மைத் தீர்வு. இறையச்சத்தை மனங்களில் விதைப்பதே இதன் முதல் படி!

# உயிர் குடிக்கும் விளையாட்டுகள் கொரூர ப்ளூவேல், சக்திமான்..

நன்றி: Oneindia Tamil ஆகஸ்ட் 31, 2017

சென்னை: இன்று பரபரப்பாகப் பேசப்படும் ப்ளூவேல் விளையாட்டு போல இந்தியாவில் குழந்தைகள் மற்றும், சிறுவர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள் என்று எல்லோரிடமும் பாதிப்பை உண்டாக்கி உயிர்பறித்த விளையாட்டுக்கள் நிறைய உள்ளன. விபரீத விளையாட்டுக்கள் எப்படி வினையாகின்றன என்பதை பெற்றோருக்கும் இளைய தலைமுறையினருக்கும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதே போல சினிமாவில் ஹீரோக்கள் செய்யும் சாகசங்களைப்போல ரியலாகவும் செய்ய நினைத்து பல பேர் தங்களின் உயிரை இழந்த சம்பவங்கள் இந்தியாவில் நடந்துள்ளன. கடந்த ஜூலை மாதம் 24ஆம் தேதி மும்பை தொழிலதிபர் அப்படித்தான் உயிரிழந்துள்ளார்.




### பாகுபலி போல சாகசம்

இந்திரபால் படேல் என்ற அந்த மும்பைத் தொழிலதிபர் மும்பையை அடுத்து 73 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் சஹாபூர் போர்ட்டில் இருக்கும் நீர்வீழ்ச்சி ஒன்றில் “பாகுபலி“ திரைப்படத்தில் காட்டப்படும் பிரபாஸ் போல அருவியைத் தாண்டிக் குதித்து அநியாயமாக உயிரிழந்திருக்கிறார்.

### சக்திமான்

சில பத்து ஆண்டுகளுக்கும் முன்பாக, இப்படித்தான் ‘சக்திமான்“ என்றொரு குழந்தைகளுக்கான தொடர் தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. முகேஷ் கன்னா சக்திமானாக அதில் ஒரு விரலை உயர்த்திப் பிடித்துக் கொண்டு மந்திரம் உச்சரித்து தனக்குத் தானே சுழலும் பூமி போலச் சுற்றுவார் உடனே அவருக்குப் பறக்கும் சக்தி வந்து நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்திற்குச் சென்று விடுவார். இது அந்த தொடரில் வந்த காட்சி. இதைப் பார்த்து நிஜமென்று நம்பிய சிறுவர்களில் பலர் மொட்டை மாடியில் நின்று கொண்டு இதைப் பரீட்சித்துப் பார்த்து உயிரிழந்த சம்பவங்கள் நிறைய நடந்துள்ளன.

### 3000 பேரை காவு கண்ட ப்ளூ வேல்

இன்றைக்கு உலக அளவில் அச்சுறுத்திக்கொண்டிருக்கும் ப்ளூ வேல் விளையாட்டிற்கு இதுவரை 3000 பேர் பலியாகியுள்ளனராம். தமிழகத்தில் முதல்பலி மதுரையில் நிகழ்ந்துள்ளது.

மொத்தத்தில் எத்தனை எச்சரிக்கை செய்யப்பட்டாலும் தனிமனித கட்டுப்பாடு என்ற ஒரு விஷயமும் உண்டு. மனிதர்கள் தங்களால் எதைச் செய்ய முடியும்? எது விபரீதத்தில் கொண்டு விடும்? என்பதை பகுத்துணரக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இப்படிப்பட்ட விபரீதங்கள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

# வேர்களை கொல்லும் விழுதுகள்
# பூச்சிக்கொல்லிகள் பெற்றோர்களுக்கும்...!

**நன்றி: யாழ் (yarl.com)**

தமிழ்நாட்டில் மதுரை மற்றும் அதையொட்டிய விருதுநகர் மாவட்டங்களில் நடப்பதாக கருதப்படும் முதியோர் கொலைகள் சமீபகாலமாக சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் தொகுக்கப்பட்டு வருகின்றன. பிபிசி தமிழோசையிடம் இவர்கள் தெரிவித்த தகவல்கள்:

- பல சம்பவங்களில் தென்னை மரத்தைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்வதற்கான மாத்திரைகள் முதியவர்களின் நோய்தீர்க்கும் மருந்து என்று கூறி அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. சிலசமயங்களில் தம் நோயின் கடுமை அல்லது தங்களின் பிள்ளைகளின் புறக்கணிப்பு ஆகியவற்றை தாள முடியாத முதியவர்கள் தாமாகவே முன்வந்து இந்த மாத்திரைகளை வாங்கி அரைத்து குடிகிறார்கள்.

- சில சமயம் இத்தகைய கொலைகள் சம்பந்தப்பட்ட முதியவர்களின் மருமகள்களால் மகன்களுக்குத் தெரியாமல் நடத்தப்பட்டாலும் பெரும்பான்மையானவை மகன்களுக்கும் தெரிந்தே அவர்களின் துணையுடனே செய்யப்படுகின்றன. இத்தகைய சந்தேக மரணங்கள் குறித்து சம்பந்தப்பட்ட குடும்பத்துக்கு மட்டுமல்ல, பெரும்பாலும் ஒட்டுமொத்த ஊருக்கும் தெரியும்.

- சொத்துக்காக, பணத்துக்காக, பராமரிக்க முடியாமல் என்று பலப்பல காரணங்களுக்காக இத்தகைய முதியோர் படுகொலைகள் நடகின்றன. படுத்த படுக்கையாக கிடக்கும் முதியோர்கள் பெருமளவில் இப்படி பலவந்தமாகக் கொல்லப்படுகிறார்கள்.

- முதியோர் தற்கொலைகளும் இந்த பகுதிகளில் அதிகம் நடக்கின்றன. குறிப்பிட்ட ஒரு கிராமத்தின் தலையாரியாக இருந்து பணி ஓய்வு பெற்ற ஒரு முதியவர், தன்னுடைய குடும்பத்தவர் தன்னை சரியாக பராமரிக்காத நிலையில், ஊரின் மயானத்தில் இருக்கும் சிதையை எரியூட்டும் மேடையில் சென்றுபடுத்துக்கொண்டு விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார். காரணம் தன்னுடைய தகன செலவுக்கு யார் பணம் செலவழிப்பது என்று தன் வாரிசுகள் மத்தியில் சண்டை வரக்கூடாது என்பதே அந்த முதியவரின் நோக்கம்.

- ஆனால் இத்தகைய மரணங்கள் நடந்த ஊர்களில் ஏறக்குறைய ஒட்டுமொத்த ஊருக்கே இவை குறித்து தெரிந்தே இருக்கிறது. ஆனால் யாரும் இத்தகைய மரணங்கள் குறித்து பெரிதாக அலட்டிக கொள்வதில்லை. காரணம் வயதான பெற்றோர்கள் அவர்களின் சொந்தப்பிள்ளைகளால் கொல்லப்படும் நிகழ்வுகள் தினசரி செய்தியாகிவிட்ட சூழலில் இப்படிப்பட்ட சந்தேக மரணங்கள் சமூகத்தால் வெகு எளிதில் கடந்து செல்லப்படுகின்றன.

# சிறுவர் சீர்திருத்தப் பாடங்கள்

இரவும் பகலும் இன்று பெற்றோர்கள் உழைப்பது எதற்காக என்று கேட்டால் என்ன பதில் வரும் என்பது நம் அனைவருக்கும் தெரிந்ததே...

ஆம், தமது பிள்ளைகளை கண்ணும்கருத்துமாக போற்றி வளர்ப்பதற்கே என்பதே!

ஆனால் அந்தப் பிள்ளைகள் நாளை இவர்களை சற்றும் மதிக்காமல் அந்நியர்களோடு ஓடிப்போவதையும், இவர்களது வயதான காலத்தில் இவர்களைப் பராமரிக்காமல் முதியோர் இல்லங்களில் சேர்ப்பதையும், வட இந்தியாவில் நடப்பதுபோல் சில புண்ணியத்தலங்களில் கொண்டுபோய் கவனிப்பாரற்று விட்டு விடுவதையும், கருணைக் கொலை என்ற பெயரில் கொன்று விடுவதையும் அன்றாட நிகழ்வுகளாகக் கண்டு வருகிறோம்.

இது ஒருபுறம் இருக்க மறுபுறம் மது மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகுதல், அற்ப விடயங்களுக்காக கொலை செய்தல், தற்கொலை செய்து கொள்ளுதல், குடும்ப அமைப்புகளை சீர்குலைத்தல்.... இன்னும் இவைபோன்ற சீரழிவுகளும் இன்றைய இளையதலைமுறையினரிடம் அதிகரித்து வருவதை நாம் காணமுடிகிறது.

இவற்றுக்கெல்லாம் காரணம் தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வு இவர்களுக்குள் மேலோங்கியிருப்பதே. இந்த வாழ்க்கையைப்பற்றியும் இறைவனைப் பற்றியும் சரியான கண்ணோட்டம் இல்லாமை இந்த விபரீத நிலைக்குக் கொண்டு சென்றிருப்பதை சிந்திப்போர் அறியலாம்.

இவர்களுக்கு முறைப்படி கற்பிக்க வேண்டியவற்றைக் கற்பிக்காமல் வளர்த்து வருவதன் விபரீத விளைவுகளை இன்று நாடு அனுபவித்து வருகிறது. இவற்றைத் திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் போனால் இங்கு மக்கள் வாழ்வதற்கே வெறுப்பான நிலை ஏற்படும். தேசிய குற்றவியல் ஆவணக்காப்பகத்தின் அறிக்கை இதை உறுதிப்படுத்துகிறது. நம் நாட்டில் ஒவ்வொரு நாளும் 366 பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்கிறது அந்த அறிக்கை! அதாவது ஒவ்வொரு நான்கு நிமிடத்திற்கும் ஒரு இந்தியர் தன்னைதானே மாய்த்துக்கொள்கிறார்!

இந்நிலை மாற நாம் என்ன செய்யவேண்டும்? இறைமார்க்கம் இஸ்லாம் கூறும் தீர்வை இங்கு முன்வைக்கிறோம். நிலைமையை சீர்திருத்த வேண்டும் என்ற நாட்டமுள்ளவர்களும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளும் கீழே கூறப்படுபவற்றை பிள்ளைகளுக்கு கட்டாயப் பாடமாக்கி கற்பிக்கலாம்.

## கல்வியின் நோக்கம் பண்படுத்தலே, பணம் சம்பாதிப்பது அல்ல!

கல்வி கற்பிப்பதன் தலையாய நோக்கம் மனிதனை சீர்படுத்தி அவனை பண்புள்ளவனாக ஆக்கவேண்டும் என்பதாக இருக்கவேண்டும். மாறாக உணவை சம்பாதிப்பதற்கான வழிகளைத் தேடுவது இரண்டாவது இடத்தில்தான் இருக்க வேண்டும். உண்மையில் அதற்குக் கல்வி கற்பதன் அவசியமும் இல்லை. காரணம் மனிதனை விட அறிவு குறைந்த

விலங்கினங்களும் பறவைகளும் மீன்களும் எல்லாம் தங்களின் உணவை எளிதாகவே அடைவதைப் பார்க்கிறோம். இந்த உண்மையை முக்கியமாக பெற்றோர்கள் உணரவேண்டும். தங்கள் பிள்ளைகள் தங்களைவிட செல்வந்தர்களாக வளரவேண்டும் என்ற ஒரு மாயை பெரும்பாலான பெற்றோர்களை ஆட்கொண்டிருப்பதை நாம் காணமுடிகிறது. அதன்காரணமாக வாழ்க்கையின் வாஸ்த்தவங்களை அவர்கள் சிந்திக்காமல் விட்டுவிடுகிறார்கள். அது அவர்களை கசப்பான அல்லது ஆபத்தான முதுமையில் கொண்டுபோய்விடுகிறது.

**பெற்றோர்களின் பொறுப்பு**

மனிதனைப் பண்புள்ளவனாக ஆக்க வேண்டுமானால் அதற்கு அவனைப் பெற்றவர்கள் முழுமையான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அது அவர்களின் மீது இறைவன் சுமத்தியுள்ள கடமையும் ஆகும்.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஓர் ஆண், தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பாளன் ஆவான். அவன் தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவான். ஒரு பெண், தன் கணவனின் இல்லத்துக்கும், அவனுடைய குழந்தைக்கும் பொறுப்பாளி ஆவாள். அவள் அவர்கள் குறித்து விசாரிக்கப்படுவாள். பணியாள் தன் உரிமையாளரின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் அது குறித்து விசாரிக்கப்படுவான். நினைவில் கொள்க! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்.

இதை இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஸஹீஹ் முஸ்லிம் 3733.

குழந்தைகளைப் பண்புள்ளவர்களாக வளர்க்கத் தவறினால் இவ்வுலகிலேயே அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டிய அவலத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பது ஒருபுறம் இருக்க மறுமையில் இறைவனின் தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்.

## ஒன்றே குலம் என்ற பாடம்

குழந்தைகளுக்கு கற்பிக்கவேண்டிய முதல் பாடம் ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்பதாக இருக்க வேண்டும். மனிதகுலம் அனைத்தும் ஒரு ஆண்- ஒரு பெண் ஜோடியில் இருந்து உருவானதே. எனவே அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களே என்ற அடிப்படை உண்மை போதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சகமனிதனை சகோதரனாக மற்றும் சமமானவனாகப் பார்க்கும் பண்பு ஏற்படும். அகில உலகத்திலும் இன்று வாழும் மனிதர்கள், அவர்களின் நிறம், மொழி, இனம், இடம், மதம் என்பவை பல்வேறாக இருந்தாலும் அனைவரும் ஆதி

தந்தை ஆதித் தாய் என்ற ஒரே ஒரு ஜோடியில் இருந்து பல்கிப் பெருகியவர்களே. மனிதர்களுக்குள் இனத்தையும் நிறத்தையும் மொழியையும் காரணம் காட்டி உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று ஏற்றத்தாழ்வு கற்பித்து அதன்மூலம் சகமனிதனை அடக்கியாள நினைப்பவர்கள் இந்த உண்மையை மறக்கடிக்கச் செய்கிறார்கள்.

ஆனால் இவ்வுலகைப் படைத்த இறைவனோ மனிதகுல சமத்துவத்தை கீழ்கண்டவாறு தனது வேதத்தில் பறைசாற்றுகிறான்:

**● மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:13)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

## ஒருவனே இறைவன் என்ற பாடம்

தொடர்ந்து இவ்வுலகைப் படைத்த இறைவன் ஒருவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன், அவன் நம் மீது அளவிலா அன்பு கொண்டவன், அவன் நம்மைப் பரிபாலிக்கிறான். இவ்வுலகையும் அதில் உள்ளவற்றையும் நமக்காக படைத்த அவனுக்கு நாம் நன்றிக்கடனோடு வாழ கடமைப்பட்டுள்ளோம் என்பவற்றைக் கற்பிப்பதோடு இறைவனது தன்மைகளையும் தெளிவாக கற்பிக்க வேண்டும்:

**● கூறுவீராக! அவன் அல்லாஹ், ஏகன், அல்லாஹ் (எவரிடத்தும்) எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர். (திருக்குர்ஆன் 112:1-4)**

அதாவது ஏகனான, தனித்தவனான, ஆதியும் அந்தமும் இல்லாத, தன்னிகரற்ற அந்த இறைவனை இடைத்தரகர்கள் இன்றி வீண் சடங்கு சம்பிரதாயங்கள் இன்றி நேரடியாக வணங்குவதற்கு குழந்தைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். அந்த உண்மை இறைவன் மட்டுமே வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்தவன் என்பதையும் நம் பிரார்த்தனைகளுக்கு பதில் அளிக்கக்கூடியவன் என்பதையும் மாசற்ற முறையில் கற்பிக்கவேண்டும்.

## இறைவன் அல்லாதவற்றை வணங்கக் கூடாது என்ற பாடம்

படைத்தவன் அல்லாத எதுவும் வணக்கத்துக்குரியவை அல்ல என்பதையும் அடிப்படையாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். தனிநபர் நல்லொழுக்கம் மலர இது ஒரு முக்கியமான பாடம் ஆகும். ஏனெனில் உண்மையான இறைவனை விட்டுவிட்டு அவன் அல்லாதவற்றை மக்கள் கடவுளாக பாவித்து வணங்க முற்படும்போது இறைவனைப் பற்றிய

மதிப்பும் மரியாதையும் மனித உள்ளங்களில் இருந்து அகன்று போகிறது. தொடர்ந்து இறையச்சம் - அதாவது இறைவன் என்னைக் கண்காணிக்கிறான், எனது செயல்களைக் குறித்து அவன் விசாரிக்க உள்ளான் என்ற பொறுப்புணர்வு- அகன்றுபோவதால் மக்கள் எந்தவித தயக்கமும் இன்றி பாவச்செயல்களில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு சமூகத்தில் பாவங்கள் பெருக இது முக்கிய காரணமாகிறது. மேலும் கடவுளை பல்வேறு விதமாக சித்தரித்து இடைத்தரகர்கள் மக்களை சுரண்டுவதற்கும் மூடநம்பிக்கைகளைப் பரப்புவதற்கும் இச்செயல் காரணமாகிறது. மனிதகுலத்தில் சமத்துவமும் சகோதரத்துவமும் மறைந்து ஜாதிகளும் பிரிவினைகளும் தீண்டாமைக் கொடுமைகளும் சமூகத்தில் உடலேடுக்கின்றன. பலரை நாத்திகத்தின்பால் தள்ளுவதற்கும் இதுவே காரணமாகிறது.

இவ்வாறு பற்பல குழப்பங்களுக்குக் காரணமாகும் இந்தப் பாவமே இஸ்லாமிய வழக்கில் இணைவைத்தல் அல்லது இணைகற்பித்தல் என்று அறியப்படுகிறது. இப்பாவத்தை இறைவன் தனது வேதத்தில் வன்மையாகக் கண்டிக்கிறான்:

- **“...நிச்சயமாக இறைவனுக்கு இணைவைத்தல் மாபெரும் பாவமாகும்... (திருக்குர்ஆன் 31:13)**
- **“நிச்சயமாக இறைவன் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் இறைவனுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.“ (திருக்குர்ஆன் 4:48)**
- நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம் புகுவார்.

அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி)

# நன்மை - தீமை, சரி - தவறு பற்றிய பாடம்

அடுத்தபடியாக குழந்தைகளுக்கு போதிக்கப் படவேண்டியது நன்மை எது தீமை எது, சரி எது தவறு எது, என்பவற்றை வேர்த்திரித்து அறிதல் பற்றிய கல்வியாகும். வாழ்க்கையில் நல்லொழுக்கம் ஏற்படுத்த இது முக்கியமாகும்.

யார் இவ்வுலகிற்கும் அதில் உள்ளவற்றிர்க்கும் சொந்தக்காரனோ அதிபதியோ அவன் எதை நமக்கு நன்மை என்றும் அல்லது நமக்குத் தீமை என்றும் சொல்கிறானோ அதுவே உண்மையிலும் உண்மை. அவன்தான் இப்பேரண்டம் அனைத்தையும் அவற்றில் உள்ள சிறிதும் பெரிதுமான அனைத்து படைப்பினங்களையும் படைத்து இயக்கிப் பரிபாலித்து வருபவன். அவன் மட்டுமே முக்காலத்தையும் உணர்ந்தவன் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் பற்றிய முழுமையான

அறிவுள்ளவன். அவனது அறிவு அனைத்தையும் சூழ்ந்தது. மனிதனுக்கும் மனித குலத்துக்கும் மட்டுமல்ல மற்ற அனைத்துப் படைப்பினங்களுக்கும் எது நல்லது எது கெட்டது என்பதை மிக மிகப் பக்குவமாக அறிபவன் அந்த இறைவன் மட்டுமே. எனவே நம் பரிபாலகன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான் அறிவுடைமை.

மேலும் இங்கு நமது குறுகிய தற்காலிக வாழ்க்கை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைக்கப் பட்டுள்ளது. இதில் இறைவன் நம்மிடம் எவற்றை செய்ய ஏவுகிறானோ அவை புண்ணியங்களாக இறைவனிடம் பதிவு செய்யப்படுகின்றன. எவற்றை செய்யக்கூடாது என்று நம்மைத் தடுக்கிறானோ அவையே பாவங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. எனவே இந்த வாழ்க்கைப் பரீட்சையில் வென்று மறுமையில் சொர்க்கத்தை நமது நிரந்தர வாழ்விடமாக அடையவேண்டுமானால் நாம் அவனது எவல்விலக்கல்களை பேணியே ஆகவேண்டும்.

அந்த அடிப்படையில் இறைவன் தரும் அளவுகோல்தான் இறைவேதங்கள். ஒவ்வொரு காலகாட்டங்களிலும் அருளப்பட்ட வேதங்களே அந்தந்த காலகட்டங்களுக்கு அளவுகோல்களாக திகழ்கின்றன. அந்த அடிப்படையில் இன்று நாம் வாழும் காலகட்டத்திற்காக அருளப்பட்ட அளவுகோல்தான் இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மூலமாக அருளப்பட்ட திருக்குர்ஆன்:

- **25:1. (நன்மை தீமைகளைத் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ்வேதத்தை தன் அடியார் (முஹம்மது) மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன். இது உலகத்தார் அனைவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாக இருக்கின்றது.**

# மறுமை வாழ்வே நிலையானது என்ற பாடம்

அடுத்து இவ்வுலகின் தற்காலிக தன்மைகளை நினைவூட்டி இது மனிதனுக்கு ஒரு பரீட்சைக் கூடம், இந்த குறுகிய வாழ்வை முடித்துக்கொண்டு இறைவனிடம் மீள உள்ளோம், நம் செயல்களுக்கு இறைவனிடம் விசாரணை உண்டு, அதற்கேற்ப நமக்கு சொர்க்கம் அல்லது நரகம் உண்டு, அந்த இரண்டில் ஒன்றுதான் நமது நிரந்தர இருப்பிடமாக அமையும் என்பவற்றை அவசியமாகக் கற்பிக்க வேண்டும். பொதுவாகவே மறுமை வாழ்க்கை பற்றி மக்களுக்குக் கற்பிக்கும்போது பெரும்பாலோருக்கு எதிர்கேள்விகள் எழுவது இயல்பு. திருக்குர்ஆன் அவற்றுக்கு அறிவுபூர்வமான பதில்களை தருகிறது.

- **3:185 ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில்தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதிபலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக)**

**நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை.**

### மறுமையை நம்பமுடியவில்லையா?

*மறுமையில் மீண்டும் நாம் உயிர்கொடுத்து எழுப்பப்பட இருக்கிறோம் என்ற உண்மையை நம்ப மறுப்பவர்களை மனிதனின் ஆரம்ப நிலையைப்பற்றி சிந்திக்கச் சொல்கிறது குர்ஆன்:*

**● 36:77 - 79. மனிதனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து நாமே நிச்சயமாகப் படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? அவ்வாறிருந்தும், அவன் (நமக்கு) வெளிப்படையான தர்க்க வாதியாகி விடுகிறான். மேலும், அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டதெப்படி என்பதை) மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான் “எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?“ என்று. (நபியே!) நீர் கூறுவீராக: “முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்“ என்று.**

*தொடர்ந்து இறைவன் தனது படைப்பாற்றலைப் பற்றி நினைவூட்டி அறிவுபூர்வமாக மனிதனை சிந்திக்கத் தூண்டுகிறான்:*

**● 36:80- 82. “பசுமையான மரத்திலிருந்து உங்களுக்காக நெருப்பை உண்டாக்குபவனும் அவனே அதிலிருந்தே நீங்கள் (தீ) மூட்டுகிறீர்கள் .வானங்களையும் பூமியையும் படைத்தவன், அவர்களைப் போன்றவர்களைப் படைக்கச் சக்தியற்றவனா? ஆம் மெய்யாகவே, அவனே (பல வகைகளையும்) படைப்பவன் யாவற்றையும் நன்கறிந்தவன். எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் “குன்“ (ஆய்விடுக) என்று கூறுவதுதான் உடனே அது ஆகிவிடுகிறது.**

**● 41:39. பூமியானது காய்ந்து வரண்டு கிடப்பதை நீர் பார்ப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் நின்றுள்ளதாகும் அதன் மீது நாம் மழையைப் பொழியச் செய்தால், அது (புற் பூண்டுகள் கிளம்பிப்) பசுமையாக வளர்கிறது் (இவ்வாறு மரித்த பூமியை) உயிர்ப்பித்தவனே, நிச்சயமாக இறந்தவர்களையும் திட்டமாக உயிர்ப்பிக்கிறவன் நிச்சயமாக அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றல் உடையவன்.**

*இன்னும் இவைபோன்ற பல வசனங்கள் மறுமை வாழ்வின் சாத்தியம் பற்றி நமக்கு உணர்த்துவதாக உள்ளன.*

# இறுதித்தீர்ப்பு நாள், சொர்க்கம் நரகம் பற்றிய பாடம்

**● 6:102. அவன்தான் அல்லாஹ் - உங்கள் இறைவன் அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை எல்லாப் பொருட்களின் படைப்பாளன் அவனே ஆவான் ஆகவே, அவனையே வழிபடுங்கள் - இன்னும் அவனே எல்லாக் காரியங்களையும் கண்காணிப்பவன்.**

*இந்த வசனத்தில் கூறப்படுவது போல சதா நாம் இறைவனின் கண்காணிப்பில் உள்ளோம் என்ற உணர்வு குழந்தைகளுக்கு உண்டாக்கப் பட்டால்தான் நற்குணமுள்ள பொறுப்புணர்வுள்ள குடிமக்கள்*

உருவாகுவார்கள்.

நமது செயல்கள் ஒவ்வொன்றும் பதிவாகின்றன என்பது அறிவியல் நாளுக்கு நாள் உறுதிப்படுத்தும் உண்மையாகும். இன்று எங்கும் கண்காணிப்புக்காக பொருத்தப்படும் ஊஊவுஏ கேமராக்கள் பதிவு செய்கின்றனவோ அதைப்போலவே நம் ஒவ்வொருவரது கண்களும் காதுகளும் தோல்களும் நமது நடவடிக்கைகளை இயற்கையாகவே பதிவு செய்து கொண்டிருக்கின்றன. வேறு பலவகையிலும் நமது செயல்களின் பதிவுகள் நடந்து கொண்டிருந்தாலும் இவை ஒன்றே போதுமானவையாக இருக்கும் என்பதை நாம் அறியலாம்.

- **மேலும், இறைவனின் பகைவர்கள் (நரகத்)தீயின் பால் ஒன்று திரட்டப்படும் நாளில், அவர்கள் (தனித் தனியாகப்) பிரிக்கப்படுவார்கள். இறுதியில், அவர்கள் (அத்தீயை) அடையும் போது, அவர்களுக்கு எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவை செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும். (திருக்குர்ஆன் 41:19,20**

ஆம், மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பவை அவனுடைய காதுகளும் கண்களும் தோல்களும். ஒலி அலைகள் காதுகளால் ஏற்கப்படுவதையும் ஒளி அலைகள் கண்களால் ஏற்கப்படுவதையும் அவற்றை உரிய இடங்களில் பதிவு செய்வதையும் இன்றைய அறிவியல் நமக்கு சொல்லித் தருகிறது. இவற்றோடு தோல்களும் நம் செயல்பாடுகளின் பதிவுகளைத் தாங்கி நிற்கின்றன என்பது மேற்படி வசனம் எச்சரிக்கிறது. இறுதித்தீர்ப்பு நாளன்று விசாரணையின்போது அவை மனிதனைக் காட்டிக்கொடுக்கும் என்பதை திருக்குர்ஆன் சொல்கிறது. இறுதி விசாரணையின்போது அங்கு நடக்கும் உரையாடலைப் படம்பிடித்துக் கட்டுகிறான் இறைவன்:

- **41:21. அவர்கள் தம் தோல்களை நோக்கி, “எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?” என்று கேட்பார்கள் அதற்கு அவை: “எல்லாப் பொருட்களையும் பேசும் படிச் செய்யும் இறைவனே, எங்களைப் பேசும்படிச் செய்தான்அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான் பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்” என்று கூறும்.**
- **41:22. “உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, உ(ங்கள் பாவ)ங்களை நீங்கள் மறைத்துக் கொள்ளவில்லை அன்றியும், நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிகுதமானதை நிச்சயமாக இறைவன் அறியமாட்டான் என்று நீங்கள் எண்ணிக்கொண்டீர்கள்.**

இறுதித்தீர்ப்பு நாளன்று நம் ஒவ்வொருவரது வினைப்பதிவும் கச்சிதமாக சமர்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நமது நிரந்தர வாழ்விடம் சொர்க்கமா இல்லை நரகமா என்பது தீர்மானிக்கப்படும்.

## சொர்க்கம் என்பது எப்படி இருக்கும்?

அது ஓர் சாந்தியும் சமாதனமுமான இருப்பிடம். அங்கு கவலை, தீமை, பகை, சோர்வு, நோய், முதுமை, பஞ்சம், போன்ற எதற்குமே இடம் இல்லை. திகட்டாத இன்பங்களில் ஊறித் திளைக்கும் இடம் அது. தோட்டங்களும் பூங்காவனங்களும் மாசற்ற நீரூற்றுகளும் உயர் மாளிகைகளும் சுவைமிக்க கனிகளும் உணவுகளும் பானங்களும்

*அளவின்றி அனுபவிக்க இறைவன் ஏற்பாடு செய்த இடம்! என்றும் இளமையோடு இருக்கும் இடம்! காரணம் மரணம் என்பது இனி இல்லையல்லவா?*

*இதோ தனது திருமறையில் இறைவன் கூறுகிறான்:*

**● 10:9 நிச்சயமாக எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவன் அவர்கள் இறைநம்பிக்கை கொண்ட காரணத்தினால் நேர்வழி காட்டுவான். இன்பமயமான சுவனபதிகளில் அவர்களுக்குக் கீழ் நதிகள் ஓடிக் கொண்டிருக்கும்.**

**● 47:15 பயபக்தியுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் உதாரணமாவது: அதில் மாறுபடாத தெளிந்த நீரைக் கொண்ட ஆறுகளும், தன் சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மது ரச ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன. இன்னும், அதில் அவர்களுக்கு எல்லா விதமான கனிவகைகளும், தங்கள் இறைவனின் மன்னிப்பும் உண்டு. (இத்தகையோர்) நரகத்தின் எவன் என்றென்றுமே தங்கியிருந்து, கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு (அதனால்) குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடுமோ அவனுக்கு ஒப்பாவாரா?**

**● 29:58 எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு, நற்காரியங்கள் செய்கிறார்களோ அவர்களை, சதா கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதியிலுள்ள உயர்ந்த மாளிகைகளில், நிச்சயமாக நாம் அமர்த்துவோம். அவற்றில் அவர்கள்நிரந்தரமாக (நிலைத்து) இருப்பார்கள். (இவ்வாறாக நற்)செயல்கள் புரிவோரின் கூலியும் பாக்கியம் மிக்கதாகவே உள்ளது.**

## நரகம் எப்படி இருக்கும்?

*சொர்க்கத்தைப் போலவே நரகமும் மறுபுறம் காத்திருக்கிறது. அது இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி மறந்து தான்தோன்றித்தனமாக வாழ்ந்த கொடியோருக்காகவும் இறைவனையும் அவன் தூதர்களையும் வேதங்களையும் நிராகரித்தோருக்காகவும் காத்திருக்கிறது. கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் நடுவே மரணமற்ற வாழ்வும் அகோர பசியும் தாகமும் அதைத்தீர்க்க உணவாக முட்செடிகளும் கொதிநிலை அடைந்த பானங்களும் என்று தொடர் வேதனைகளின் இருப்பிடமாக இருக்கும். நரக வேதனைகள் பற்றி திருக்குர்ஆன் எச்சரிக்கிறது:*

**● 20:74 நிச்சயமாக எவன் தன் இறைவனிடத்தில் குற்றவாளியாக வருகிறானோ அவனுக்கு நரகம் நிச்சயமாக இருக்கிறதுகி அதில் அவன் மரிக்கவும் மாட்டான் வாழவும் மாட்டான்.**

**● 7:41 அவர்களுக்கு நரகத்தில் (நெருப்பு) விரிப்புகளும் (போர்த்திக் கொள்வதற்கு) அவர்களுக்கு மேலே நெருப்புப் போர்வைகளும் உண்டு - இன்னும் இவ்வாறே அநியாயம் செய்பவர்களுக்கு நாம் கூலி கொடுப்போம்.**

**● 4:56 யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம்கி அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லாத (வேறு) தோல்களை அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென, அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான்.**

**● 23:104 (நரக) நெருப்பு அவர்களுடைய முகங்களை கரிக்கும்கி இன்னும் அதில் அவர்கள் உதடு சுருண்டு (முகம் விகாரமானவர்களாக) இருப்பார்கள்.**

**● 32:20 ஆனால் எவர்கள் (வரம்பு மீறிப்) பாவம் செய்தார்களோ அவர்கள்**

**தங்குமிடம் (நரக) நெருப்புத்தான் - அவர்கள் அதை விட்டு வெளியேற நாடும் போதெல்லாம் அதிலேயே மீண்டும் தள்ளப்பட்டு: “எதனை நீங்கள் பொய்ப்பித்துக் கொண்டிருந்தீர்களோ அந்த (நரக) நெருப்பின் வேதனையை அனுபவியுங்கள்“ என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.**

**● 78:21-25 நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வரம்பு மீறியவர்களுக்குத் தங்குமிடமாக! அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள்!...... கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர.!**

**● 18:29 (நபியே!) இன்னும் நீர் கூறுவீராக: “இந்தச் சத்திய (வேதம்) உங்கள் இறைவனிடமிருந்து (வந்து)ள்ளதுகி“ ஆகவே விரும்புபவர் (அதனை) நம்பி கொள்ளட்டும். விரும்புபவர் (அதனை) நிராகரிக்கட்டும். அநியாயக் காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம்கி (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்கி அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும்கி மிகக் கேடான பானமாகும் அது! இன்னும் இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும்.**

*ஆக, நரக வேதனை என்பது தாங்க முடியாதது. அதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் நாம் மரணத்திற்கு முன்பாக இறைவனிடம் மன்னிப்பு கோரி திருந்திய வாழ்க்கை வாழவேண்டும். இறைவன் நம் அனைவரையும் நரகிலிருந்து காப்பானாக! சொர்க்கம் செல்லும் நன்மக்களில் நம்மை சேர்த்து வைப்பானாக!*

# வாழ்க்கையில் சோதனைகள் சகஜம் என்ற பாடம்

*அடுத்ததாக நாம் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டிய முக்கிய பாடம் இது. இன்று பிள்ளைகள் தேர்வுகளில் தோல்வி என்றவுடன் நாடுவது தற்கொலையையே என்பதை நாம் நன்கறிவோம். 2015 ஆம் வருடத்தில் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 8,934 ஆகும். அதற்கு முந்திய 5 வருடங்களில் 39,775 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் இதற்கு முக்கிய காரணம் இவ்வாழ்க்கை என்பது ஓர் பரீட்சை இதில் பொறுப்புணர்வோடு நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவர்கள் உணராததே! மனிதனை இந்த பூமிக்கு அனுப்புவதன் நோக்கமே அவனைப் பரீட்சித்துப் பார்க்கவே என்பதால் வாழ்க்கையில் இழப்பு, தோல்வி, சங்கடங்கள் உட்பட பற்பல சோதனைகளும் சகஜமாக வந்து செல்லும். இதை இறைவனே எடுத்துக் கூறுகிறான்:*

**● 2:155 “நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!**

*அவ்வாறு சோதனைகள் வரும்போது நாம் பதறாமல் பொறுமையை மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கையின் உண்மை நிலையை மனதில் இருத்தி நம்மை நாமே நிதானப் படுத்திக் கொள்ள வேண்டும். இதோ இறைவனே வழிகாட்டுகிறான்:*

● **2:156-157 "(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்" என்று கூறுவார்கள். இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்."**

அதாவது நாம் இறைவனுக்கு உரியவர்கள், இந்த குறுகிய தற்காலிக பரீட்சையை முடித்துக்கொண்டு அந்த இறைவனிடமே திரும்பிச்செல்ல உள்ளவர்கள் என்ற பேருண்மையை நினைவு கூர்ந்து பொறுமை காத்து ஆக வேண்டியவற்றை கவனித்தால் நமக்கு நிதானமும் மன நிம்மதியும் ஏற்படும்.

அவ்வாறு வாழ்வில் ஏற்படும் இழப்பையும் இலாபகரமானதாக மாற்றுவதற்கான வழிகளையும் இறைவனின் தூதர் நமக்குக் கூறிச்சென்றுள்ளார்கள்:

● "சோதனைக்கு உள்ளான ஒருவர் இறைவன் இட்ட கட்டளைப்படி இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் (நிச்சயமாக நாம் இறைவனுக்கு உரியவர்கள், அவனிடமே திரும்பிச்செல்ல உள்ளவர்கள்) என்று கூறியபின் இறைவா, நான் படும் துன்பத்திற்கு கூலி வழங்குவாயாக, நான் இழந்ததை விட மேலானதைக் கொண்டு இதற்க்கு பகரம் வழங்குவாயாக!" என்று பிரார்த்தித்தால் அவருக்கு இறைவன் மேலானதை வழங்குவான்" (நூல்: முஸ்லிம்)

### கல்வியின் பயன்பாடு

மேற்கூறப்பட்ட போதனைகளை கட்டாயப் பாடமாக்கி அத்துடன் மற்ற பாடங்களை போதிக்கும் போதுதான் மனிதனுக்கு இறையச்சம் என்ற பொறுப்புணர்வு உண்டாகும். அதன் விளைவாக அவன் நல்லொழுக்கம் உள்ளவனாகிறான். அப்போதுதான் நல்லொழுக்கம் உள்ள சமூகம் நம்மைச் சூழ உருவாகும். நாட்டில் பாவங்கள் கட்டுப்படுத்தப்படும். பெற்றோர்களும் முதியோர்களும் மதிக்கப்படுவார்கள். இவ்வாறு நல்லொழுக்கம் பெற்ற மனிதன் தான் பெற்ற கல்வியை ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்துவான். இல்லையேல் அது அழிவுக்குத்தான் பயன்படும். அதைத்தான் இன்று வல்லரசுநாடுகளின் செயல்பாட்டில் காண்கிறோம். அவை இன்று அறிவியல் முன்னேற்றத்தின் மூலம் கண்டுபிடித்த அணுஆயுத தளவாடங்களைக் காட்டி உலகநாடுகளின் வளங்களைக் கொள்ளையடித்து வருகின்றன. அந்த ஆயுதங்களை விற்பனை செய்வதற்காக சிறுசிறு நாடுகளுக்கிடையே வெறுப்பு அரசியல் மூட்டி போர்முனைக்கு தள்ளுகின்றன. மனித உயிர்களை மிக மலிவாகக் கருதி மாய்த்து வருகின்றன. இவையனைத்தும் தீய கல்வியின் பயன்பாடுகளே!

## அண்டை வீட்டாரின் உரிமைகள்

● **"ஒருவர் தன் (வீட்டுச்) சுவரில் தன் அண்டை வீட்டுக்காரரர் மரக்கட்டை பதிப்பதைத் தடுக்க வேண்டாம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**(நூல்: புகாரீ)**

# ஈருலக நலனுக்கான ஐந்து கடமைகள்!

ஒன்றே மனிதகுலம் ஒருவனே இறைவன் அவனது கண்காணிப்பில் உள்ளோம். இறுதித்தீர்ப்பு நாளும் நல்லோருக்கு சொர்க்கமும் தீயோருக்கு நரகமும் மறுமையில் உள்ளன என்பன போன்ற நம்பிக்கைகளை வெறும் போதனையோடு அல்லது எண்ணத்தளவில் விட்டுவிடுவதில்லை இஸ்லாம். மனிதன் அவற்றை நித்தமும் நினைவு கூர்ந்து கொள்கையில் வாழ்நாள் முழுக்க நிலைத்திருக்க அவனுக்குத் தெளிவான ஒரு வாழ்க்கைத் திட்டத்தையும் வழிகாட்டுதலையும் இஸ்லாம் வழங்குகிறது. இஸ்லாத்தை ஏற்று வாழ முற்படுபவர்களுக்கு ஐந்து விடயங்கள் கடமையாக்கப்பட்டுள்ளன. இவை இஸ்லாத்தின் தூண்கள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றைப் பேணுவோர் இவ்வுலக வாழ்விலும் அமைதியைப் பெறுகிறார்கள். மறுமையிலோ சொர்க்க வாழ்வைப் பரிசாகப் பெறுகிறார்கள்.

## 1. கொள்கைப் பிரகடனம்:

“வணக்கத்துக்கு உரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. மேலும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்” என்ற வாசகத்தை மனதார ஏற்று வாயால் மொழிதல். அரபு மொழியில் ”லா இலாஹ இல்லல்லாஹ். முஹம்மதுர் ரசூலுல்லாஹ்”)

ஆத்மார்த்தமாக மேற்கூறப்பட்ட கொள்கைப் பிரகடனத்தை இதயத்தில் உறுதி செய்து வாயால் மொழிந்தால் அந்த நொடியிலிருந்து ஒரு முஸ்லிமாகி விடுகிறார். எந்த ஒரு மத குருவின் முன்னிலையோ யாருடைய சாட்சியமோ அல்லது ஒரு வழிபாட்டுத்தலத்தில் பதிவு செய்யும் அவசியமோ அங்கு இல்லை!

ஆம், இம்மார்க்கத்தை ஏற்க மன மாற்றமும் குண மாற்றமும் தவிர வேறு எந்த மாற்றங்களும் முக்கியம் இல்லை. ஆனால் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும். மீண்டும் படைத்தவன் அல்லாதவற்றை கடவுள் என்று சொல்வதோ கற்பனை உருவங்களை வணங்குவதோ தொழுகையை விடுவதோ தீமைகள் பக்கம் செல்வதோ கூடாது!

இதைத் தொடர்ந்து ஐவேளைத் தொழுகை, ஜகாத் எனும் கட்டாய தானம், நோன்பு, ஹஜ்ஜ் போன்றவைக் கடமையாக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தனிநபர் நல்லொழுக்கத்தையும் சமூக சீர்திருத்தங்களையும் ஏற்படுத்துவதோடு சமூக உறவுகளை வலுப்படுத்துவதையும் நீங்கள் காணலாம்.

## 2. ஐவேளைத் தொழுகை

ஒருவர் இஸ்லாத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் ஷைத்தானின் தீங்குகளில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும். அதற்கு சதா இறைவனின் தொடர்பும் நினைவும் வேண்டும். உடல்தூய்மை பேணி தொழுகைகளை வேளாவேளை நிறைவேற்றுவதன் மூலம் இறை நினைவும் இறைவனுக்கு பதில் சொல்லவேண்டும் என்ற பொறுப்புணர்வும்

உண்டாவதால் அது மனிதனை பாவங்களில் இருந்து விலக்கி வைக்கிறது. ஐவேளைத் தொழுகைகளுக்கு முன் உடல்தூய்மையும் அங்கத் தூய்மையும் வலியுறுத்தப்படுவதால் தூய்மை பேணும் பண்பும் உண்டாகிறது. தொழுகையில் இறைவனுக்கு முன்னால் அடக்கத்தோடு நிற்றல், குனிதல், அமருதல், சாஷ்டாங்கம் போன்ற பல நிலைகளும் இருப்பதால் தொழுகையாளிக்கு அன்றாடம் தேவையான உடற்பயிற்சியும் மனோவளமும் அதே நேரத்தில் நிறைவான ஆரோக்கிய பயன்களும் கிடைக்கின்றன. தொழுகைகளை குறிப்பிட்ட நேரங்களில் நிறைவேற்ற வேண்டும் என்றிருப்பதால் நேரக்கட்டுப்பாடு (punctuality) உணர்வுடன் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை முன்னதாகவே திட்டமிடுவதும் எளிதாகிறது. காலையில் சூரிய உதயத்திற்கு முன் தொடங்கி இரவு முடியும் வரைக் கச்சிதமான இடைவேளைகளோடு ஐவேளை தொழுகை நேரங்கள் அமைந்திருப்பதால் தொழுகையாளி நாள்முழுக்க சோம்பல் மறந்து சுறுசுறுப்பாக இயங்குகிறான். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் தன்னோடு துணையிருக்கிறான் என்ற உணர்வு அவனுக்கு அலாதியான தன்னம்பிக்கையைத் தருகிறது. அது அவன் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் சவால்களையும் சோதனைகளையும் சாதனைகளாக மாற்ற உதவுகிறது.

### கூட்டாகத் தொழுவதன் பயன்கள்

முடிந்தவரை இத்தொழுகைகளை கூட்டாக நிறைவேற்ற இஸ்லாம் பணிக்கிறது.

- ”ஜமாஅத்துடன் கூட்டாகத் தொழுவது தனித்துத் தொழுவதைவிட 27 பங்கு பதவியால் கூடுதலாகும்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு உமர்(ரழி)- புகாரீ, முஸ்லிம்
- இல்லங்களில் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் ஐவேளைத் தொழுகைகளைக் கூட்டாக நிறைவேற்றும்போது அங்கு குறிப்பாகக் குழந்தைகளுக்கு ஒழுக்கமும் நேரக்கட்டுப்பாடும் பயிற்றுவிக்கப்படுகிறது.
- இதைப் பள்ளிவாசல்களில் கூட்டாக வரிசைகளில் அணிவகுத்து நிறைவேற்றும்போது சகோதரத்துவமும் சமத்துவமும் இயற்கையாகவே பேணும் பண்பு வந்துவிடுகிறது.

நம்நாட்டில் நூற்றாண்டுகளாகத் தொடரும் தீண்டாமைத் தீமையில் இருந்து இந்த இறைமார்க்கத்தை ஏற்றுக்கொண்ட மக்கள் விடுதலை பெற்று வருவதை அனைவரும் அறிவோம். ஒரு காலத்தில் தீண்டாமையால் பிரிந்திருந்தவர்கள் இன்று பள்ளிவாசல்களில் தோளோடு தோள் நின்று அணிவகுத்து தொழுவதும் ஒரே தட்டில் பகிர்ந்து உண்ணுவதும் சாதாரணப் புரட்சிகள் அல்ல. படைத்த இறைவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன் என்ற கொள்கை காரணமாக இன்ன பிற மனிதர்கள் முன்னாலும் தன்னைவிடத் தாழ்ந்த படைப்பினங்களுக்கு முன்னாலும் இம்மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தலை சாய்க்கவோ வணங்கவோ முற்படுவதில்லை. அதனால் மனிதனின் சுயமரியாதை உணர்வு நிலைநிறுத்தப்படுகிறது.

மேலும் பள்ளிவாசல்களில் மக்கள் பரஸ்பரம் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுவதால் சமூக உறவுகள் வலுப்படுவதோடு சமூகத்தின் குறைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்கும் குழுக்கள் அல்லது கூட்டமைப்புகள் உருவாகின்றன.

## 3. நோன்பின் மாண்பு

நோன்பின் மூலம் ஆன்மீகப் பரிசுத்தமும் சுயக் கட்டுப்பாடும் சமூகத்தின் தேவை உணரும் பண்பும் உருவாகின்றன. சக நோன்பாளிக்கு உணவளிப்பது அந்த நோன்பாளி பெறும் நற்கூலிக்கு சமமான கூலியைப் பெற்றுத்தரும் என்பது நபிமொழி. இதன் காரணமாக ரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களில் செல்வந்தர்கள் முன்வந்து ஏற்பாடு செய்யும் நோன்புக் கஞ்சி விருந்தும் இப்தார் உணவுவிருந்துகளும் சகஜமாக நடைபெறுவதைக் காணலாம். இந்த விருந்துகளில் ஏழை பணக்காரன், மொழி வேற்றுமை போன்றவை மறந்து அனைவரும் சமபந்திகளில் அமர்ந்து உணவுண்பதும் நடைபெறுகின்றன.

## 4. வறுமை ஒழிப்பில் ஜகாத்

செல்வம் என்பது இறைவனுக்கு சொந்தமானது, அது தற்காலிகமாக தன்னிடம் தரப்பட்டுள்ளது என்ற உணர்வை தனிமனிதனிடம் உண்டாக்கி அதை ஏழைகளோடு பங்கிட்டு உண்ணச் செய்கிறது ஜகாத் என்ற கட்டாய தர்மம். இதை இஸ்லாமியர்கள் கூட்டுமுறையில் ஆங்காங்கே நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். உண்மையில் சமூகத்தில் குற்றங்கள் பெருகக் காரணங்களில் ஒன்று வறுமை. ஜகாத் விநியோகம் நிறைய ஏழைகளின் வறுமை நீங்க ஏதுவாகிறது. இருந்தாலும் இதே ஜகாத் முறையை அரசாங்கம் கையிலெடுத்து முறையாக நடைமுறைப்படுத்துமானால் வறுமை ஒழிப்பு செவ்வனே நிறைவேறும். நம் நாட்டில் விதிக்கப்படும் வருமானவரி விகிதத்தை விட ஜகாத் விகிதம் பன்மடங்கு குறைவாக இருப்பதால் மக்கள் தாங்களாகவே முன்வந்து ஜகாத்தை செலுத்துவார்கள். கோடிக்கணக்கில் வெளிநாட்டு வங்கிகளில் முடங்கிக் கிடக்கும் கருப்புப்பணமும் உள்நாட்டிலேயே புழக்கத்திற்கு வரும்.

## 5. ஹஜ்ஜ் என்ற உலக முஸ்லிம்கள் சங்கமம்!

போதிய பொருள் வசதியும் ஆரோக்கியமும் கொண்ட முஸ்லிம்கள் மீது வாழ்வில் ஒரு முறையேனும் ஹஜ்ஜ் என்ற புனித யாத்திரை மேற்கொள்வது கடமையாக்கப்பட்டுள்ளது. உலக முஸ்லிம்கள் இனம், நிறம், மொழி, இடம் போன்ற வேற்றுமைகள் மறந்து சகோதரர்களாக சங்கமிக்கும் நிகழ்வே வருடாவருடம் மக்காவில் நடைபெறும் ஹஜ்ஜ். இஹ்ராம் என்ற வெள்ளை சீருடை அணிந்து மக்காவில் அமைந்துள்ள கஅபா என்ற புனித ஆலயத்தை வலம் வருதல், ஸ∴பா மற்றும் மர்வா என்ற குன்றுகளுக்கு இடையே ஓடுதல், மினா என்ற பள்ளத் தாக்கில் தங்குதல், அரபா பெருவெளியில் ஒன்று கூடுதல், தொழுகைகள் மற்றும் பிரார்த்தனைகள் நிறைவேற்றுதல் போன்ற பல சடங்குகள் ஹஜ்ஜ் என்ற கடமையின் அம்சங்களாகும். ஒன்றே மனிதகுலம் ஒருவனே இறைவன் என்ற கொள்கை முழக்கத்தை நடைமுறை வடிவில் உலகறியச் செய்து உலகளாவிய சகோதரத்துவத்தை பறைசாற்றுகிறது ஹஜ்ஜ் என்ற கடமை!

# வழுக்கைத்தலையில் முடிமுளைத்தால்..?

நபிகளார் கூறிய பனூ இஸ்ராயீல்களிடையே வாழ்ந்த தொழுநோயாளி, குருடர், வழுக்கைத் தலையர் ஆகியோர் தொடர்பான நிகழ்ச்சியில் நமக்குப் பாடங்கள் பல உள்ளன. இறைவன் வழங்கும் அருட்கொடைகளுக்கு நன்றியோடு நடப்போரையும் அல்லாதவர்களையும் தோலுரிக்கிறது இந்த நிகழ்வு.

முற்காலத்தில் வாழ்ந்த பனூ இஸ்ராயீல் குலத்தாரில் மூன்று பேர் இருந்தனர். ஒருவர் தொழு நோய் பிடித்தவராகவும் மற்றொருவர் வழுக்கைத் தலையராகவும் இன்னொருவர் குருடராகவும் இருந்தனர். இறைவன் அவர்களை சோதிக்க நாடி வானவர் ஒருவரை அவர்களிடம் அனுப்பினான்.

### தொழுநோயாளி

அவர் தொழு நோயாளியிடம் வந்து, “உனக்கு மிகவும் விருப்பமானது எது?“ என்று கேட்க அவர், “நல்ல நிறம், நல்ல தோல் தான் எனக்கு மிகவும் விருப்பமானவை. மக்கள் என் வியாதியின் காரணத்தால் என்னை அருவருக்கிறார்கள்“ என்று கூறினார். உடனே அவ்வானவர் அவரை தம் கரங்களால் தடவ அந்த வியாதி அவரைவிட்டுச் சென்றுவிட்டது. அவருக்கு அழகிய நிறமும் அழகிய தோலும் தரப்பட்டன.

பிறகு அவ்வானவர், “எந்த செல்வம் உங்களுக்கு மிகவும் விருப்பமானது?“ என்று கேட்க அவர், “ஒட்டகம்தான்... (என்றோ) அல்லது மாடுதான்... எனக்கு மிகவும் விருப்பமானதாகும்“ என்று பதிலளித்தார். உடனே கருத்தரித்த ஒட்டகம் ஒன்று அவருக்கு கொடுக்கப்பட்டது.

அவ்வானவர், “இதில் உனக்கு அபிவிருத்தி (பரக்கத்) வழங்கப்படும்““ என்று கூறினார்.

### வழுக்கைத் தலையர்

பிறகு அவ்வானவர் வழுக்கைத் தலையரிடம் சென்றார். “உனக்கு மிகவும் விருப்பமானது எது?“ என்று கேட்டார். அவர், “அழகான முடியும் இந்த வழுக்கை என்னைவிட்டுப் போய் விடுவதும் தான் எனக்கு மிகவும் விருப்பமானது. மக்கள் என்னை அருவருத்து ஒதுக்கி வைத்து விட்டார்கள்““ என்று கூறினார். உடனே அவ்வானவர், அவரின் தலையைத் தடவிக் கொடுக்க, அவருக்கு அழகான முடி வழங்கப்பட்டது.

அவ்வானவர், “எந்த செல்வம் உனக்கு விருப்பமானது?“ என்று கேட்டார்.

அவர், “மாடுதான் எனக்கு மிக விருப்பமான செல்வம்““ என்று கூறினார்.

உடனே வானவர் அந்த வழுக்கைத் தலையருக்கு கர்ப்பமான மாடு ஒன்றைக் கொடுத்து, “இதில் உனக்கு வளர்ச்சி வழங்கப்படும்““ என்று கூறினார்.

### குருடர்

பிறகு அவ்வானவர் குருடரிடம் சென்று, “உனக்கு மிகவும் விருப்பமானது எது?“ என்று கேட்டார்.

அவர், “இறைவன் என் பார்வையை எனக்குத் திரும்பச் செய்வதும் அதைக் கொண்டு மக்களை நான் பார்ப்பதும்தான் எனக்கு மிகவும் விருப்பமானது““ என்று பதிலளித்தார். அவ்வானவர் அவரைத் தடவிட, இறைவன் அவருக்கு அவரின் பார்வையைத் திருப்பித் தந்தான். அவ்வானவர், “உனக்கு எந்த செல்வம் விருப்பமானது?“ என்று கேட்க அவர், “ஆடு தான் (எனக்கு மிகவும் விருப்பமானது)““ என்று பதில் அளித்தார். உடனே, அவ்வானவர் அவருக்குக் கருவுற்ற ஆடு ஒன்றைக் கொடுத்தார்.

**பெருகிய செல்வமும் சோதனையும்**

தொழு நோயாளியாய் இருந்தவருக்கு ஒரு கணவாய் நிரம்ப ஒட்டகங்களும் வழுக்கைத் தலையராய் இருந்தவருக்கு ஒரு கணவாய் நிரம்ப மாடுகளும், குருடராக இருந்தவருக்கு ஒரு கணவாய் நிரம்ப ஆடுகளும் (பெருமளவில்) கிடைத்தன.

**மீண்டும் தொழுநோயாளியிடம்..**

பிறகு அவ்வானவர் தொழு நோயாளியாய் இருந்தவரிடம் தம் பழைய தோற்றத்திலும் அமைப்பிலும் சென்று, “நான் ஓர் ஏழை மனிதன். என் பயணத்தில் என் வாழ்வாதாரம் அறுபட்டுவிட்டது. செலவுக்குப் பணம் இல்லை. இன்று உதவிக்கான வழி வகை எனக்கு இறைவனையும் பிறகு உன்னையும் தவிர வேறெவருமில்லை. உனக்கு அழகிய நிறத்தையும் அழகிய தோலையும் செல்வத்தையும் கொடுத்த இறைவனின் பெயரால் உன்னிடம் ஓர் ஒட்டகத்தைக் கேட்கிறேன். அதன் வாயிலாகப் பயணத்தில் நான் போக வேண்டிய இடத்தைச் சென்றடைவேன்“ என்று கூறினார். அதற்கு அந்த மனிதர், “எனக்குக் கடமைகள் நிறைய இருக்கின்றன. எனவே, என்னால் நீ கேட்டதைத் தர முடியாது“ என்றார்.

உடனே அவ்வானவர், “உன்னை எனக்குத் தெரியும் போலுள்ளதே. மக்கள் அருவருக்கிற தொழு நோயாளியாக நீ இருக்கவில்லையா? நீ ஏழையாக இருக்கவில்லையா? பிறகு இறைவன் உனக்கு செல்வத்தைக் கொடுத்தான் அல்லவா?“ என்று கூறினார். அதற்கு அவன், “இல்லையே. நான் இந்த அழகான நிறத்தையும் தோலையும் மற்றும் திரண்ட இச்செல்வத்தையும் வாழையடி வாழையாக என் முன்னோர்களிடமிருந்து வாரிசாகப் பெற்றேன்“ என்று பதிலளித்தான். உடனே அவ்வானவர், “நீ இக்கூற்றில் பொய்யனாயிருந்தால் நீ முன்பு எப்படி இருந்தாயோ அப்படியே உன்னை இறைவன் மாற்றி விடட்டும்“ என்று கூறினார்.

**மீண்டும் வழுக்கைத் தலையரிடம்..**

பிறகு வழுக்கைத் தலையரிடம் தம் பழைய தோற்றத்திலும் அமைப்பிலும் வந்து முன்பு தொழு நோயாளியிடம் கூறியதைப் போன்றே கூறினார். அவனும் முதலாமவன் அவருக்கு பதிலளித்தைப் போன்றே பதிலளித்தான். வானவரும், “நீ உன் கூற்றில் பொய்யனாயிருந்தால் நீ முன்பு எப்படியிருந்தாயோ அப்படியே உன்னை இறைவன் மாற்றி விடட்டும்“ என்று கூறினார்.

**மீண்டும் குருடரிடம்...**

இறுதியாக குருடரிடம் தம் தோற்றத்திலும் அமைப்பிலும் வந்து, “நான்

ஓர் ஏழை மனிதன் வழிப்போக்கன். என் வழிச் செலவுக்கான பணம் தீர்ந்து போய்விட்டது. இன்று உதவிக்கான வழிவகை எனக்கு இறைவனையும், பிறகு உன்னையும் தவிர வேறெவருமில்லை. என் பயணத்தில் என் தேவையைத் தீர்த்துக் கொள்ள உதவும் ஆடு ஒன்றைத் தரும்படி உனக்குப் பார்வையைத் திரும்பத் தந்தவன் பெயரால் கேட்கிறேன்““ என்று சொன்னார்.

குருடராயிருந்து பார்வை பெற்ற அந்த மனிதர் வானவரிடம், “நான் குருடனாகத் தான் இருந்தேன். இறைவன் என் பார்வையைத் திருப்பித் தந்தான். நான் ஏழையாக இருந்தேன் என்னைச் செல்வந்தனாக்கினான். எனவே, நீ விரும்புவதை எடுத்துக் கொள். இறைவன் மீதாணையாக! நான் இன்று நீ எடுக்கிற எந்தப் பொருளையும் திருப்பித் தரும்படி இறைவனுக்காக சிரமப்படுத்த மாட்டேன்“ என்று கூறினார்.

உடனே அவ்வானவர், “உன் செல்வத்தை நீயே வைத்துக் கொள். இது உங்களைச் சோதிப்பதற்காகத்தான். இறைவன் உன்னைக் குறித்து திருப்தியடைந்தான். உன் இரண்டு தோழர்கள் (தொழு நோயாளி மற்றும் வழுக்கைத் தலையன்) மீது கோபமுற்றான்“ என்று கூறினார் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு: அபூ ஹுரைரா(ரலி) நூல்

நம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் அழகும் ஆரோக்கியமும் செல்வமும் எல்லாம் இந்தப் பரீட்சை வாழ்வுக்காக தற்காலிகமாக தரப்படுபவையே. இவற்றின் உண்மை உரிமையாளன் இறைவன் மட்டுமே. பரீட்சைக்காக வழங்கப்படுபவை எந்நேரமும் திரும்பப் பெறப்படலாம். திரும்ப வழங்கவும் படலாம். இந்த உணர்வோடு வாழ்வோரை அகங்காரமும் உண்மை மறுப்பும் அண்டுவதில்லை. இவ்வாறு எந்நிலையிலும் நேர்மை பேணி இறைகட்டளைகளைப் பேணுவோருக்கு இறைவனின் திருப்தியும் மறுமையில் சொர்க்கமும் பரிசாகக் கிடைக்கின்றன. அல்லாதவர்களுக்கு இறைகோபமும் நரகமுமே வாய்க்கின்றன.


**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018(நுங்கம்பாக்கம்), 9840527687(பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994453346 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எஃப்:9845217262

# கூட்டுக்குடும்பமா ?
# எச்சரிக்கை தேவை!!

நம் நாட்டில் அதிகமான மக்கள் பெரும்பாலும் கூட்டுக் குடும்பமாக வாழ்கின்றனர். அது போன்ற குடும்பங்களில் பெண்களும், ஆண்களும் பேண வேண்டிய ஒழுங்குகளும் வரம்புகளும் நிறைய உள்ளன. குறிப்பாக அண்ணன் தம்பி திருமணம் ஆன பிறகும் இணைந்து வாழும் குடும்பங்களில் இறைவன் விதித்துள்ள வரம்புகளைப் பேண முடிந்தால் மட்டுமே அவ்வாறு இணைந்து வாழ்வது கூடும். அவ்வாறில்லையாயின் வெவ்வேறு குடித்தனங்களில் வாழ்வதே இம்மை மற்றும் மறுமைக்கு நல்லது..

இன்று கூட்டுக்குடும்பங்களில் நடக்கும் பல தவறுகள் - முக்கியமாக விபச்சாரம் என்ற பெரும்பாவத்திற்கு இட்டுச்செல்லும் பல நடவடிக்கைகள் - பொறுப்புதாரிகளும் விவரம் அறிந்தவர்களும் பெரியவர்களும் அவ்வப்போது கண்டிக்காத காரணத்தால் சகஜமாகத் தொடர்கின்றன. இவை சகஜமாகிவிட்டன என்பதற்காக இறைவன் விதித்த வரம்புகளோ வரம்புமீறல்களுக்கான தண்டனைகளோ மாறுவதில்லை.

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: உங்களில் எவரேனும் தீமையைக் கண்டால் கையால் தடுக்க வேண்டும். இயலாவிட்டால் நாவால் தடுக்க வேண்டும். அதற்கும் இயலாவிட்டால் மனதால் வெறுக்க வேண்டும். இதுதான் இறைநம்பிக்கையின் இறுதிநிலையாகும். (நூல்: முஸ்லிம் 78)

மேற்படி நபிகளாரின் வழிகாட்டுதலின் படி தவறுகளை அல்லது வரம்புமீறல்களைக் காணும் பொறுப்புதாரிகள் தடுக்கவோ கண்டிக்கவோ செய்யாவிட்டால் அவை பிற குடும்ப அங்கத்தினர்களால் அத்தவறுகளுக்கு கிடைக்கும் அங்கீகாரமாக எடுத்துக்கொள்ளப் படும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

கீழ்கண்ட இறைவசனங்களும் நபிமொழிகளும் அந்நிய ஆடவர் மற்றும் அந்நிய பெண்கள் விடயத்தில் நாம் கைகொள்ளவேண்டிய வரையறைகளைப் பற்றியும் அத்துமீறல்கள் பற்றியும் நமக்கு தெரிவிக்கின்றன. கூட்டுக்குடும்பங்களாக வாழ நினைப்பவர்களின் கவனத்திற்கு இவை முன்வைக்கப்படுகின்றன.

● **(நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன்.**

**ஸ்ரீ தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக! அவர்கள் தமது அலங்காரத்தில் வெளியே தெரிபவை தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். தமது முக்காடுகளை மார்பின் மேல் போட்டுக் கொள்ளட்டும். தமது கணவர்கள், தமது தந்தையர், தமது கணவர்களுடைய தந்தையர், தமது புதல்வர்கள், தமது கணவர்களின் புதல்வர்கள், தமது சகோதரர்கள், தமது சகோதரர்களின் புதல்வர்கள், தமது சகோதரிகளின்**

**புதல்வர்கள், பெண்கள், தங்களுக்குச் சொந்தமான அடிமைகள், ஆண்களில் (தள்ளாத வயதின் காரணமாக பெண்கள் மீது) நாட்டமில்லாத பணியாளர்கள், பெண்களின் மறைவிடங்களை அறிந்து கொள்ளாத குழந்தைகள் தவிர மற்றவர்களிடம் தமது அலங்காரத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம். அவர்கள் மறைத்திருக்கும் அலங்காரம் அறியப்பட வேண்டுமென்பதற்காக தமது கால்களால் அடித்து நடக்க வேண்டாம். நம்பிக்கை கொண்டோரே! அனைவரும் அல்லாஹ்வை நோக்கித் திரும்புங்கள்! இதனால் வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன் 24: 30,31)**

● *இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "(அந்நியப்) பெண்கள் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டாம் என உங்களை நான் எச்சரிக்கின்றேன்" என்று கூறினார்கள். அப்போது மதீனா தோழர்களில் ஒருவர், "இறைவனின் தூதரே! கணவருடைய (சகோதரன் போன்ற) உறவினர்கள் (அவள் இருக்கும் இடத்திற்குச் செல்வது) குறித்து தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "கணவருடைய உறவினர்கள் மரணத்திற்கு நிகரானவர்கள்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ரலி), நூல்: புகாரி*

● *"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் ஒரு மஹ்ரம் இல்லாத நிலையில் ஒரு பெண்ணுடன் தனிமையில் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் அவர்களுடன் மூன்றாமவனாக ஷைத்தான் இருப்பான்." (அஹ்மத்)*

*(மஹ்ரம் என்றால் சகோதரர், தந்தை போன்ற திருமணம் செய்ய தடைசெய்யப்பட்ட உறவினர்கள்)*

● *"உங்களில் ஒருவர் ஒரு மஹ்ரம் இல்லாமல் ஒரு பெண்ணுடன் தனித்திருக்க வேண்டாம்." (புகாரி, முஸ்லிம்)*

● **(நம்பிக்கை கொண்டோரே!) நீங்கள் விபசாரத்திற்கு நெருங்காதீர்கள் அது மானக் கேடானதாகும். மேலும் (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீயவழியாகவும் இருக்கின்றது. (அல்குர்ஆன் 17:32)**

● *நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: மணமாகாத ஆணும், பெண்ணும் விபச்சாரம் செய்வார்களேயானால், அவர்களுக்கு தலா நூறு கசையடியும், ஓராண்டு ஊரைவிட்டும் அப்புறப்படுத்துவதுமாகும். மணமாகிய ஆணும், பெண்ணும் விபச்சாரம் செய்தார்களேயானால் அவர்களுக்கு உரிய தண்டனை தலா நூறு கசையடியும், அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்லுவதுமாகும். ஆதாரம்: உபாத துப்னுஸ்ஸாமித் (ரழி) நூல்: முஸ்லிம்*

● **நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்ததில் தூய்மையான வற்றையும், பூமியிலிருந்து உங்களுக்கு நாம் வெளிப்படுத்தியதிலிருந்தும் (நல் வழியில்) செலவிடுங்கள்! கண்ணை மூடிக் கொண்டே தவிர எதை வாங்கிக் கொள்ள மாட்டீர்களோ அத்தகைய மட்டமான பொருளைச் செலவிட நினைக்காதீர்கள்! இறைவன் தேவையற்றவன் புகழுக்குரியவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! (அல்குர்ஆன் 2: 267)**

# அண்டை வீட்டாரின் உரிமைகள்

**● இறைவனை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டாருக்கும், உறவினரல்லாத அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், நாடோடிகளுக்கும், உங்கள் அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்! பெருமையடித்து, கர்வம் கொள்ளும் எவரையும் இறைவன் நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 4:36)**

## கண்ணியப்படுத்துங்கள்!

● "இறைவனையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாரை கண்ணியப் படுத்தட்டும்!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)நூல்: புகாரீ

## இறைவனின் அன்புக்கு அழகிய வழி

● "இறைவனும் அவன் தூதரும் விரும்புவது யாருக்கு மகிழ்ச்சி அளிக்குமோ அவர், தம் அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துர்ரஹ்மான் பின் அபீ குராத் (ரலி) நூல்: பைஹகீ

## நபிகளாரின் இறுதி அறிவுரை

● நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின் போது "நான் அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்" என்று அதிகமாகக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஉமாமா (ரலி) நூல்: தப்ரானீ

## யார் முஸ்லிம்?

● "உன் பக்கத்தில் இருக்கும் அண்டை வீட்டாருக்கு நன்மை செய்! நீ முஸ்லிமாவாய்" என்று நபிகளார் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)

## உதவுங்கள்

● "அண்டை வீட்டார் குறித்து என்னிடம் (வானவர்) ஜிப்ரீல் அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார். எந்த அளவிற்கென்றால், (எங்கே) அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக்கி விடுவாரோ என்று கூட நான் எண்ணினேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) நூல்: இப்னுமாஜா, புகாரீ

## குழம்பில் தண்ணீரை அதிகப்படுத்துங்கள்

● "அபூதரே! நீ குழம்பு வைத்தால் அதில் தண்ணீரை அதிகப்படுத்து! உன் பக்கத்து வீட்டாரை (அதைக் கொடுத்து) கவனித்துக் கொள்!"" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: புகாரீ

## அற்பமானது என்று கொடுக்காமல் இருந்து விடாதீர்!

● "முஸ்லிம் பெண்களே! ஓர் அண்டை வீட்டுக்காரிக்கு ஓர் ஆட்டின் குளம்பை (அன்பளிப்பாகக்) கொடுத்தாலும் அதை(க் கொடுப்பதையும் பெறுவதையும் அவர்கள்) இழிவாகக் கருத வேண்டாம்"" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரீ (2566)

# வாசகர் எண்ணம்

● திருகுர்ஆன் நற்செய்திமலர் செப்டம்பர் 2017 இதழ் படித்தேன், மிகவும் நேர்த்தியாக இருந்தது. குறிப்பாக உறவிலார்க்கு உறவாகும் உத்தமர்கள் செய்தி தொகுப்பினை படித்தவுடன் என் உள்ளம்கனிவாக கசிந்தது. மிகவும் அற்புதமான ஆத்ம திருப்தியுடன் செய்யும் செயல் இறைவனிடத்தில் என்றும் கூலி உண்டு என்பதை நான் உணர்ந்தேன். இச்சேவையை தேனி நகரத்தில் செய்ய நினைத்து உள்ளேன். உங்களின் அணுகுமுறைகளை எனக்கு தெரிவிக்கவும். ஜீவ சாந்தியின் பணி நல்ல முறையில் நடக்கட்டும், வாழ்த்துகிறேன்.

- TM **பெரோஸ் கான், தேனி**

● பெருமழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு நீங்கள் செய்த சேவைகள் அறிந்து பெருமைப்படுகிறேன். உங்கள் சேவைகளும் தர்மங்களும் மென்மேலும் வளரட்டும். ஹவுஸ் ஆப் பீஸ் முஸ்லிம்களுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது.

- **ஏ சி பிரபாகரன், அல்சூர் , பெங்களூர்**

● ஆள்பாதி, ஆடைபாதி என்பார்கள்.. ஆகஸ்ட் இதழின் அட்டைப்பட முகப்பில் அடுக்கி வைக்கப்பட்ட நவீன காலத்து பாவங்களில் தலையாய பாவமான ஆடை குறைப்பு மக்கிப்போன வெட்க உணர்வுக்கு அடிப்படையாகும். மாதுவை சமமாக மாற்றுவோம் எனக் கூவும் சமூக ஆர்வலர்கள் மற்றும் மாதர் சங்கங்கள் என அனைத்துமே .. திரை கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடக்கிறது. சந்தோ'மா ..? துக்கமா...? பொழுதுபோக்கா...? என சகலத்திற்கும் மது ஒன்றே மருந்து என்ற மேற்குலக கலாச்சாரத்தை வெண்திரை முதல் ஹோம்திரை வரை இளைஞர்களின் மனங்களில் விதைக்கிறார்கள். மானிட ஒழுக்க விழுமியங்கள், இந்திய பண்பாடு, பொது சிந்தனை, இரக்ககுணம், நீதி போதனைகள்....என அனைத்துமே பழமை யென்ற குழிவெட்டி புதைக்கப்படும் அவல நிலை. இதிலிருந்து நம் மானிட சமுதாயத்தை திருக்குர்ஆன் நற்செய்தி மலர் ஆக்கங்கள் காக்கும் வண்ணம் அமைந்துள்ளன. மறுமையில் நரகம் நம் சமூகத்தைத் தீண்டாமல் தடுத்திட இவை ஊக்கமாக அமையட்டும். ஆமின்.

- **ஏ. அப்துல் சமது, அரவக்குறிச்சி**

● **“தன் அண்டை வீட்டாரை விட்டு தான் (மட்டும்) வயிறு நிரம்ப ஒருவன் சாப்பிட மாட்டான்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**
**அறிவிப்பவர்: உமர் (ரலி) நூல்: அஹ்மத் (367)**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

விவரங்களை இன்னும் நாம் நம்மால் அறிய இயலாத ஏராளமான விவரங்களை கட்டளைகளை - முன்கூட்டியே எழுதியதும் இயக்குவதும் கட்டுப்படுத்துவதும் யார்?

- **87:1-3 (நபியே!) உயர்வான உம் இறைவனுடைய திருப் பெயரைத் துதிப்பீராக! அவன் எத்தகையவன் எனில், அவன்தான் படைத்தான் பொருத்தமாகவும் பக்குவமாகவும் அமைத்தான். மேலும், அவனே (அவற்றுக்கு வேண்டிய அனைத்தையும்) அளவுபட நிர்ணயித்து (அவற்றைப் பெறுவதற்கும் இயங்குவதற்கும்) வழிகாட்டினான்.**

இவ்வாறு படைப்பினங்களுக்குரிய இனப்பெருக்கத்திற்கான திட்டமிடலும் நிர்ணயித்தலும் மூலப்பொருட்களை குறிப்பிட்ட விகிதத்தில் ஒன்றுசேர்த்தலும் அளவைகள் மாறாமல் கட்டுப்படுத்துவதும் ... என எவ்வளவோ செயல்பாடுகள் தற்செயலாக நிகழ்ந்து விடுமா? ஆம் என்று நம்பும் நாத்திகர்களை நாம் பகுத்தறிவுவாதிகள் என்று கூற முடியுமா?

இந்தக் கேள்வி ஒருபுறம் இருக்க மறுபுறம் இந்தச் செயல்பாடுகளில் எதையுமே நிகழ்த்தாத ஆறடி உயரம் கொண்ட அற்பமான மனிதர்களையும் உயிரற்ற உணர்வற்ற பொருட்களையும் எல்லாம் வல்ல இறைவனுக்கு ஒப்பாக்கும் ஆத்திகர்களை தங்கள் நம்பிக்கையை மறுபரிசீலனை செய்ய அழைக்கிறான் உண்மை இறைவன்.

## கடவுளர்களைப் பரீட்சித்துப் பாருங்கள்!

இறைவேதம் திருக்குர்ஆனில் இறைவன் மனிதர்கள் அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட கடவுளர்களின் உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்து அவை வணங்குவதற்குத் தகுதிவாய்ந்தவைதானா என்று ஆராய்ந்து பார்க்கச் சொல்கிறான்:

- **10:34. “நீங்கள் ஏற்படுத்திக் கொண்ட கடவுளர்களுள் படைப்புகளை முதன்முறையில் படைத்து பின்னர் மறு முறையும் அவற்றைப் படைக்கக்கூடியவர் எவரும் உள்ளனரா?” என்று (நபியே!) நீர் கேளும். (அவர்களுக்கு) நீர் கூறும்: “அல்லாஹ்தான் படைப்புகளை முதன் முறையும் படைக்கின்றான் பின்னர் அவற்றை மறுமுறையும் படைக்கின்றான். இதன் பிறகும் நீங்கள் எவ்வாறு வழி மாற்றப்படுகின்றீர்கள்?”**



இப்பிரபஞ்சத்தில் காணும் எண்ணற்ற உயிருள்ளதும் அல்லாததுமான படைப்பினங்களை படைத்தலும் அவற்றை அதிபக்குவமாக இயக்குதலும் அவற்றை மீண்டும் மீண்டும் படைத்தலும் எல்லாம் இறைவன் ஒருவனால் மட்டுமே சாத்தியம் என்பதை நன்றாகவே உணர்ந்துள்ளார்கள் மக்கள். எனினும் இந்தப் படைப்புப் பணியில் எந்த ஒரு பங்கையும் செலுத்தாதவற்றை கடவுளாகக் கற்பனை செய்து எப்படி ஏமாறுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறான் இறைவன்.